1967 ஜூலை 12]

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், 1964-ம் வருஷத்திலிருந்து தான் ரேஷன், கட்டுப்பாடு, கொள்முதல், இவையெல்லாம் வந்திருக்கிறது. அதற்கு பிறகுதான் அரிசி, நெல் வியாபாரிகள் கள்ள மார்க்கெட்டு, பதுக்கல் இவற்றை ஜாஸ்தியாகச் செய்கிறார்கள், முன்னால் இந்த விஷயங்கள் கிடையாது இந்தத் தொழிலில் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(பதில் இல்லை.)

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் வட ஆர்க்காடு மாவட்டத்தில் முடிந்து விட்டதால், பத்து தினங்களில் முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, என்ன முடிவு என்று கூறுவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனெவே சொன்னேன் இப்பொழுது அதற்கு இன்னும் காலம் வரவில்லை என்று. நடமாடும் கட்டுப்பாட்டை நீக்க காலம் வரவில்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்து கிறேன்.

* 281 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சட்ட பூர்வமான ரேஷன் அமலில் உள்ள இடங்களான சென்னை, கோவையில் குடியிருக்கும் சொந்த நிலம் உடையவர்கள், ஒரு ஆண்டுக்கு தேவையான அரிசி கொண்டு வரும் உத்தரவு எந்த தேதி முதல் அமல் ஆகியது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்த உத்தரவு 17–2–1966 முதல் அமலாகியது. ஆனால், அந்த உத்தரவை மாற்றி சமீபத்திலே சட்ட பூர்வமான ரேஷன் முறை இருக்கிற இடங்களிலே, ரேஷன் அதிகாரி கள், தென் சென்னையில் டெபுடி கமிஷனர் ஆப் சிவில் சப்ளைஸ்-ம், வட சென்னையில் அவரே போன்ற அதிகாரி அவர்களிடத்திலும் அந்த அனு மதிச் சீட்டை வாங்கிக் கொண்டு, நேரடியாக எடுத்துக்கொண்டு வரலாம் என்று இலகுவாக்கப்பட்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த உத்தரவு சென்னை நகரம், கோயம்புத்தூர் நகரம், இவற்றிற்கு மட்டுமா அல்லது ராச்சியத்திலுள்ள எந்த பிரதேசத்தில் இருந்தாலும், அவர்களுடைய நிலம் வேறு எங்கு இருந்தாலும், கொண்டு போகலாம் என்ற அளவுக்கு உத்தரவு அடிப் படையில் சாத்தியம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது மற்ற இடங்களுக்கும் பொருந்தும்.

திரு. சி கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த உத்தரவின் காரணமாக, தஞ்சை மாவட்டத்திலிருந்து, கள்ள மார்க்கெட்டில் வெளி மாநிலங்களுக்கு அதிகமாக நெல் வெளியேற்றப்படுகிறது என்பது சர்க் காருக்குத் தெரியுமா ? அதை நிறுத்தித் தடுக்க இந்த உத்தரவை இன்னும் கடுமையாக பரிசீலனைசெய்து தக்க உத்தரவு இட சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட தகவல் அரசாங் கத்திடம் இல்லை. தகவல் கொடுத்தால் நன்றி தெரிவிக்கும்.

திரு. தோ. மு. நல்லசாமி : சார், இன்றைக்கு இந்தக் கொள்முதல் பண்ணுவது இண்டர்-டிஸ்டிரிக்ட் மூவ்மெண்ட், இண்டர்-டாலுக் மூவ் மெண்ட், இவற்றை செக் பண்ணுவது எல்லாம், ஸ்டாசுடரி ரேஷன் ஏரியா விற்கும், கார்டு சிஸ்டமுள்ள இடங்களுக்கும் செய்யப்பட்டு வருகிறது. அதே சமயத்தில் மற்ற பிரதேசங்களிலே இருக்கும் மக்களுக்கு நன்மை

ஏற்படும் வகையில், இன்டர்-டிஸ்டிரிக்ட் மூவ்மெண்ட், இண்டர்-டாலுக் மூவ்மெண்ட், இன்னும் இண்டர் பிர்க்கா மூவ்மெண்ட் இவற்றை நீக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. எப்படி இரண்டு கண்களேயும் சமமாக பாதுகாக்க வேண்டுமோ அதே விதத்தில், ஸ்டாசுடரி ரேஷன் ஏரியா, கார்டு லிஸ்டமுள்ள இடங்கள் அதோடு மற்றப் பகுதியில் உள்ள மக்களேயும் கண்காணிக்க அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உணர்ந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினு-கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பற்றியது. கோயம்புத்தூர் மாவட்டம்பற்றி வினுவைப் போடுங்கள்.

திரு தோ. மு. நல்லசாமி : கோயம்புத்தூர் பற்றி இருந்தாலும் இதுவும் பொருந்தும் மற்ற மாவட்டங்களுக்கும். பொதுக் கேள்வியாக எடுத்துக் கொண்டாலும் சரி, கோயம்புத்தூர் கேள்வியாக எடுத்துக் கொண்டாலும் சரி.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் என்ன காரியத்திற்காக நடைபெறுகிறது என்று சொல்லுகிருர்களோ அது இல்லே. கனம் உறுப்பினர் சட்டப் பூர்வமான ரேஷன்முறை இருக்கும் இடங்களுக்கும், குடும்பக் கார்டு இருக்கும் இடங்களுக்கும்தான் பயன்படும் என்கிருர்கள். அந்த வகையில் ஏற்படுத்தப்படவில்லே. வேளாண்மை இல்லாத இடங்களில் இன்னும் தொழிலாளர்களாக இருக்கும் இடங்களில், பார்ச்சேசிங் பவர் அதிகமாக இருக்கும் இடங்களில் மக்களுக்கு இன்ஸுலேட் செய்ய வேண்டும் என்கிற காரியத்திற்காக ரேஷன் முறை வந்திருக்கிறது. அந்த முறை இல்லாவிட்டால், கிராமப் புறங்களில் அதிக விலேயேறி அவர்களுக்கு பிரதிகூலம் வரக்கூடாது என்கிற காரணத்திற்காகத்தான் இது செய்யப்படுகிறது. மற்ற கண்ணும் பார்த்துக் கொள்ளப்படுகிறது இப்பொழுது இருக்கும் ஏற்பட்டால் என்பதைத் தெரிவிக்கிறேன்.

General Sales Tax Act

*282 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether there is any proposal to review the Madras General Sales Tax Act in view of the second amendment 1966 which gives scope for arbitrary assessment ousting the jurisdiction of the courts in cases of penal assessment ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லே.

THIRU K. VINAYAKAM : Because of the Second Amendment Act of 1966 which gave scope to the assessing authority to assess arbitrarily, apart from taking away the jurisdiction of the Court, is theMinister aware of the fact that a lot of hardships is experienced by the assessees and that the arbitrary amount fixed by the authorities as the turnover is far in excess of the actual turnover ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The Government does not agree with views of the hon. Member.

மு.ப. 10-00 *283 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether it is a fact that the Supreme Court has struck down Rule 21-A framed under the Madras General Sales Tax Act,authorising the authorities to collect sales tax from the transferee of a business in respect of certain earlier arrears of tax due by the transferor ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு தொழில் குறித்துச் செலுத்தவேண்டிய விற்பனேவரியை, அத்தொழிலே இன்னெருவரிடமிருந்து தம் பெயருக்குமாற்றிக் கொண்டவரிடமிருந்து வசூலிப்பது குறித்து